# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 07 | குடியியற்கல்வி | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ……………………………………………………………………………

### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. மாணவர்களுக்கு முறையான கல்வி, ஒழுக்கம் மற்றும் விழுமியம் ஆகியவற்றை வழங்கும் நிறுவனம்,

1. நூலகம்
2. சமூக அபிவிருத்தி சங்கம்
3. கிராம அபிவிருத்தி சங்கம்
4. பாடசாலை

02. உங்கள் ஓய்வுநேர அழகியற் செயற்பாட்டிற்கு பொருத்தமற்ற செயற்பாடானது,

1. உறவினருடன் முரண்படல்
2. தியானம்
3. வரைதல்
4. கவிதை இயற்றுதல்

03. கத்தோலிக்க திருமறையினருடைய வணக்கஸ்தலம்,

1. பள்ளிவாசல்  2. விகாரை  3. தேவாலயம்  4. கோவில்

04. காய்கறி மற்றும் பழங்களின் தரத்தைக் குறிக்கும் அடிப்படைக் காரணி,

1. தராதரம்  2. புத்துணர்ச்சி  3. விலை  4. நிறை

05. நற்பிரஜை ஒருவரிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்பு,

1. பொதுச்சொத்துக்களைப் பாதுகாத்தல்
2. சுயநலம்
3. ஆக்கிரமிப்பு
4. பொறுமையின்மை

06. அவசர தொடர்புக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்,

1. 118  2. 119  3. 1929  4. 1919

07. எமது தேசிய கீதத்தினை இயற்றியவர்,

1. S.L.B கபுகொட்டாவ
2. L.L.K.குணதுங்க
3. E.A. அபயசேகர
4. ஆனந்த சமரக்கோன்

08. இலங்கையின் தேசிய விளையாட்டு,

1. கரப்பந்தாட்டம்  2. துடுப்பாட்டம்  3. வலைப்பந்து  4. எல்லே



kalvi.lk

09. கலாசார மூலமல்லாதது

1. போட்டி 2. மொழி 3. சமயம் 4. இலக்கியம்

10. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி

1. வில்லியம் கோப்பேலாவா 2. T.B. ஜெயா

3. D.S.சேனநாயக்கா 4. டட்லி சேனநாயக்கா

**தரப்பட்ட கூற்று சரியாயின் (√ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

11. சமூக வலைத்தளத்தை நாம் பயன்படுத்தும்போது சிந்தித்து செயல்பட வேண்டும். ( )
12. அடிப்படை உரிமையின் பண்புகள் சுயநலத்திலிருந்து விடுபடுவதாகும். ( )
13. பெரியோர்களிற்கு நாம் மதிப்பளிக்க வேண்டியதில்லை. ( )
14. தமிழ் பண்பாட்டில் தந்தையின் சகோதரியினுடைய மகளை 'மச்சாள்' என அழைக்கப்படுகின்றார். ( )
15. வெற்றிகரமான வாழ்க்கைக்கு குறிக்கோள் அவசியமாகும் ( )

**அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் சரியான சொற்களைத்தெரிவு செய்து இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

(புத்தகம் வாசித்தல் / சிறுவர்கள் / DNA /மனவெழுச்சி / சமூகம்)

16. பல குடும்பங்கள் இணைவதனூடாக ............................................... உருவாகின்றது.
17. அழகியற் செயற்பாட்டினால் ....................................................... கட்டுப்படுத்தப்படுகின்றது.
18. தற்காலத்தில் குற்றவாளிகளை இனம் காண்பதற்கு..............................................பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.
19. நவீன சமூகத்தில் தீயசக்திகளிடமிருந்து...............................................பாதுகாப்பதென்பது பெரும்பாலான மக்களுக்கு சவாலாகவே உள்ளது.
20. ..............................................ஓய்வு நேரத்தை திறம்பட செலவிட சிறந்த வழியாகும்.

(20x2 =40 புள்ளிகள்)

## பகுதி -II

**முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01.

1. குடும்பத்தின் இரண்டு வகைகளையும் தருக.
2. இலங்கையிலுள்ள இனக்குழுக்கள் இரண்டு குறிப்பிடுக.
3. இந்துக்களுடைய விழாக்கள் இரண்டு எழுதுக.
4. உயர்ந்த பண்புகள் இரண்டு எழுதுக.
5. எல்லா இன மக்களாலும் வணங்கப்படும் வணக்கஸ்தலங்கள் இரண்டு எழுதுக.
6. குடும்பத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் உரிமைகள் இரண்டு தருக.

(6x2=12 புள்ளிகள்)

02.

1. கூட்டுக்குடும்பம் என்பது யாது?
2. கூட்டுக் குடும்பத்தினுடைய முக்கியத்துவம் நான்கு தருக.
3. குடும்பத்தின் உறுப்பினராக இருப்பதால் கிடைக்கும் நன்மைகள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

03. 1. கடுங்கோபமாக இருக்கும்போது ஏற்படும் மாற்றம் மூன்று எழுதுக.
2. சமூக வாழ்க்கையினை பாதிக்கும் விரும்பத்தகாத செயற்பாடுகளுக்கு நான்கு உதாரணங்கள் எழுதுக.
3. உங்களது அயலவர்களுடன் நீங்கள் கூட்டாக இணைந்து செயற்படும் நிகழ்வுகள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

04. 1. பண்பாட்டு மூலங்கள் மூன்று எழுதுக.
2. இலங்கையினுடைய தேசியத்தினை அடையாளப்படுத்தும் சின்னங்கள் நான்கு தருக.
3. கலாசார பன்முகத்தன்மைக்கான காரணங்கள் ஐந்து எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)

05. 1. மாணவர்களின் உரிமைகள் மூன்று தருக.
2. மாணவர்களின் கடமைகள் நான்கு தருக.
3. சவால்களை வெல்வதற்குரிய படிமுறைகள் ஐந்து எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)

06. 1. எமது சமூகத்தில் வாழ்க்கையினை வெற்றிகரமானதாக மாற்றும் சாதகமான சக்திகள் மூன்று தருக.
2. அச்சு ஊடகம் இரண்டும் மின்னியல் ஊடகம் இரண்டும் எழுதுக.
3. விளையாட்டில் ஈடுபடுவதனூடாக நபரொருவரிடம் விருத்தியடையும் பண்புகள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

07. 1. விவசாயத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் மூன்று குறிப்பிடுக.
2. சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணுவதில் பிள்ளைகளால் பெற்றோர்களுக்கு செய்யப்பட வேண்டிய கடமைகள் நான்கு குறிப்பிடுக.
3. எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் பெற்றுக்கொள்ளும் தகவல்கள் ஐந்து குறிப்பிடுக.

(3+4+5=12 புள்ளிகள்)


kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION I PAPER DISCUSSION**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457